5. அறிவிப்புகள்.

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987-88 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது :

"In pursuance of Article 206, Clause 2, read with Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1987-88."

6. முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88—வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24—3—1987 ஆம் தேதியிட்டப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1987-88 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 1,100 கோடியே 15 இலட்சத்து 95 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை அரசுக்கு முன் பணமாக வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.

1987 மார்ச் 26]

நிறைவேற்றப்பெற்ற 1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

(ரூபாய் ஆயிரத்தில்.)

A.	வருவாய்க் கணக்கில் செலவு—	
1.	நில வரித் துறை	6,70,85
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	1,87,66
3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்	1,26,36
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்	6,55,14
5	முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்	41.53
6	பத்திரப் பதிவு	2,77,58
7	மாநிலச் சட்ட மன்றம்	56, 49
8	தேர்தல்கள்	23,62
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்	13,87,06
10	பால் வழங்கு திட்டங்கள்	77, 74
11	மாவட்ட நிர்வாகம்	16,90,86
12	தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்	1,49,55
13	நீதி நிர்வாகம்	6,43,62
14	சிறைச்சாலைகள்	3,92,66
15	காவல் துறை	39,29,25
16	தீயணைப்புப் பணிகள்	2,93,19
17	கல்வி	98,94,52
18	மருத்துவம்	46,83,55
19	பொது சுகாதாரம்	24,68,32
20	வேளாண்மை	45,86,05
21	மீனளம்	2,31,48

[1987 மார்ச் 26

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்.)
22	கால்நடை வளர்ப்பு	10,71,75
23	கூட்டுறவு	12,57,84
24	தொழில்கள்	2,58,82
25	சின்கோனா	1,23,63
26	கைத்தறியும் நெசவுத் தொழிலும்	6,52,90
27	நகைத் தொழில்	1,25,65
28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்	64,18,96
29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	9,87,72
30	சமூக நலன்	30,72,99
31	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	17,03,66
32	பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்	4,54,11
33	வீட்டு வசதி	10,09,08
34	நகர்ப் பகுதி வளர்ச்சி	11,40,26
35	நகர்பொருள் வழங்கல்	51,52,02
36	பாசனம்	25,44,39
37	பொதுப் பணிகள்—கட்டிடங்கள்	1,16,58
38	பொதுப் பணியும்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்	8,60,34
39	சாலைகளும் பாலங்களும்	30,50,32
40	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	1,87,97
41	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	19,91
42	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்	37,42,46
43	பல்வகை	72,96,39

1987 மார்ச் 26]

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்.)
44	எழுதுபொருள்—அச்சுத்துறை	6,43,84
45	காட்டுவளத் துறை	5,52,84
46	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	10,20,69
47	செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்	1,15,21
48	ஊரகத் தொழில்கள்	4,63,71
49	குடிநீர் வழங்கல்	39,26,23
	மொத்தம்—A. வருவாய்க் கணக்கு	9,04,37,00
B.	வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.	
50	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	98,41
51	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	3,35,89
52	பாசனம் குறித்த மூலதனச் செலவு	21,81,23
53	பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு	19,08,05
54	சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	11,33,75
55	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	23,66
56	காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு	7,53,41
57	ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	73,62
58	பல்வகை மூலதனச் செலவு	4,16,95
	மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு	69,24,97

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

59	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	1,26,53,98
	பெரு மொத்தம்	11,00,15,95

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.